
நகர் ஊரமைப்பு துறை(DTCP)
கோயம்புத்தூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
கோட்டூர் பேரூராட்சி

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், கோட்டூர் பேரூராட்சி மற்றும் கிராமம் புல எண்கள். 94/1A, 94/1B2-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

(திட்டமில்லாபகுதி)

இணையதள விண்ணப்ப எண்.0ZOMI8D6 நாள்-07.01.2024
அளவு 1:600 (1 செ.மீ = 6மீ)

வ



குறிப்பு :

மனைப்பிரிவின் பரப்பு : 2.38 ஏக்கர் (அ) 9635.00 ச.மீ

மனைப்பிரிவின் எல்லை

நிலையிலுள்ள சாலை / அணுகு சாலை

ஒதுக்கிய மனைகள் : 37

பொது ஒதுக்கீடுகள்
(உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை) :

I. மனைப்பிரிவு சாலை பரப்பு : 2947.88ச.மீ

II. பூங்கா

i) ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு: (மனைப்பிரிவின் பரப்பு- மனைப்பிரிவின் சாலை பரப்பு) x10%
: (9635.00 – 2947.88) x 10% = 668.71ச.மீ.

ii) TNCDBR-2019 விதி 47(6)-ன் படி பூங்கா (OSR 10%) பரப்பு 668.71 ச.மீக்கு ஈடான அரசு வழிகாட்டுமதிப்பீட ரூ.14,41,071/- நாள் 12.02.2024 அன்று மனுதாரரால் உரிய கணக்குத் தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

III. பொது உபயோகம் (மனைப்பிரிவின் மொத்தப்பரப்பில் சாலை பரப்பு நீங்கலாக1%)

A) LOCALBODY -க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (9635.00 – 2947.88)x 0.5% = 53.38 ச.மீ.(0.50%)
ஒப்படைக்கப்பட்ட பரப்பு: 49.61 ச.மீ (0.74%)

B) TANGEDCO -க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (9635.00 – 2947.88) x 0.5% = 53.38 ச.மீ.(0.50%)
ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 44.23 ச.மீ (0.66%)

மூலை முடக்கு :
12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ x 1.5மீ -ம் விடப்படல் வேண்டும் .
12.0மீ மேல் உள்ள சாலைகளுக்கு 4.5மீ x 4.5மீ -ம் விடப்படல் வேண்டும் .

கட்டிட வரம்பு
9.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ விடப்படல் வேண்டும்
9.0மீ -க்கு மேல் 18.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ விடப்படல் வேண்டும்

நிபந்தனைகள் :

1. அரசாணை எண் : 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (MA-1) நாள் .04.02.2019 மற்றும் அரசாணை எண் : 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (MA-1) நாள் .31.01.2020-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் .

2. அரசாணை எண் : 181 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறைநாள் .09.12.2020 மற்றும்அரசாணை எண் .141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் .16.07.2022-ல் தெரிவித்துள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகால் வசதி, மேல்நிலை நீர்தேக்கத்தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் மற்றும் தெருவிளக்கு வசதிகள் ஆகியனவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும் .

3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்தத்துறையாலும் நிலஆர்ஜித பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சியால் உறுதி செய்து கொள்ள வேண்டும் .

4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அரியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்ப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும் .

5. விற்பனைக்குண்டான மனைகள் விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும் .

6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைபிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி நுழைவாயிலில் 0.6 x 1.2மீ அளவிலான நிரந்திர தகவல்பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும் .

7. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைபிரிவு சாலைகளின் தரம் குறித்து உள்ளாட்சி பொறியாளரிடமிருந்து தகுதிச்சான்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் .

ம.வ./(கோ.மா.) எண். 35/2024 (இணையதள வழி)

Signature valid Signature valid
Signed by: Joint Director Location: Coimbatore Date: 2024.02.14 18:02:55
Signed by: Executive Officer Location: Coimbatore Date: 2024.08.22 16:21:41

சு.திவ்யா
அளவர் / உதவி வரைவாளர்

மு.வளர்மதி
கட்டடகலை / திட்ட உதவியாளர்

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.